

உடல்நலக் குறைவால் இயற்கை எய்திய சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் நேற்று (6.6.2025) அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

# மாங்காட்டில் நலிந்தோர்க்கு நல உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. — அமைச்சர்கள் கோவி.செழியன் — தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூன். 7-

மாங்காடு நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் 9.6.2025 திங்கள் கிழமை மாலை 6 மணியளவில் மாங்காடு எஸ்.எஸ். கோவில் தெருவில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்திற்கு நகரச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா தலைமை வகிக்கிறார்.

எம்.ஆர்.சீனிவாசன், ஜி. ராமு, ஆர்.சாரதி எம்.சி. ஆகியோர்வரவேற்புரையாற்றுகின்றனர்.

எம்.எஸ்.மகேந்திரன், ஜி. எம்.வில்லியம்ஸ்எம்.சி., சுசீலா இராதாகிருஷ்ணன், கே.ஜி.சங்கர், எம்.வல்லரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும்பொதுக்கூட்டத்தில்நலத்திட்டஉதவிகளை வழங்கி அமைச்சர் கோ.வி. செழியன்,கழகப்பொருளாளர் டி.ஆர்.பாலுஎம்.பி.,அமைச்சர் - மாவட்டச் செயலாளர் தா. மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் ஒன்றியச்செயலாளர்படப்பை ஆ.மனோகரன், நகரச்செயலாளர் கோ.சத்தியமூர்த்தி, தொகுதி தேர்தல் பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஆர்.பாஸ்கரன் எம்.சி., ஏ. கே.அப்துல்ரஹ்மான்,எம்.ஆர். வெங்கடேசன்எம்.சி.,எம்.எஸ். கதிரவன், டி.பெருமாள்ராஜ் எம்.சி.,சரளாவிஜயகுமார்எம். சி., மருத்துவர் க.ராஜேஷ், ஜி.ஞானவேல், மா.அ. தம்பிதுரை, எஸ்.எஸ்.எஸ்.யு.செல்வராஜ், யு.நளினி, மன்ற உறுப்பினர்கள் சாந்தி சம்பத் எம்.சி., ராம்பியாரிலட்சுமணன்,சரிதா ஞானவேல், க.மு.இஸ்மாயில் இ.தனசேகர், மேனகாகணபதி, சரஸ்வதிசீனிவாசன்,அனுசுயா சத்தியசீலன், மோசினாஅபிபுர்ரஹ்மான், யாஸ்மின் ஜபருல்லா,மற்றும்எஸ்.துரை,எம். சம்பத், ஆர்.எம்.விஜய குமார், பி.அவினாஷ், ஜெ.கனகராஜ், கே. பரசுராமன், வி.பிரகாஷ், எம்.பிரபு,ஜி.மகாலிங்கம்,எஸ். ராஜசேகர், எஸ்.ஸ்ரீதேவி, பி.முருகையன், க.மு.இஸ்மாயில்,டி.கணேஷ்,ஜி.ராஜசேகர், ஆர்.சரவணன், என். சுந்தரமூர்த்தி,எம்.எம்.கணபதி, எம்.தியாகராஜன்,எம்.ஜெ.ரகு, எம்.எஸ்.ரகு, பி.இஸ்மாயில், எம்.கே.பாரூக்,வி.புருஷோத்தமன் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

இ.தனசேகர், டி. ராஜேஷ், பி.வெங்கடேசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

மாலை 6 மணியளவில் காலை மாமணி இசையரசு இறையன்பன்குத்தூஸின்கழக இன்னிசைநிகழ்ச்சிநடைபெறுகிறது.

அமைச்சர் சா.மு.நாசர் தலைமை! எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் – டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ.– வி.பி.கலைராஜன் முன்னிலை!

# தண்டலம் என்.கிருஷ்ணமூர்த்தி இல்ல மணவிழா வரவேற்பு!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் — பி.கே. சேகர் பாபு வாழ்த்து!

திருவள்ளூர், ஜூன்.7,

திருள்ளூர் கிழக்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளரும், திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளருமான தண்டலம் என். கிருஷ்ணமூர்த்தியின் சகோதரர் என்.திருவேங்கடம்- டி.சின்னி ஆகியோரின் புதல்வி டி.சினேகா- எஸ்.பிரசன்னா ஆகியோரின் மணவிழா நாளை 8.6.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு சென்னை, காரனோடை ஜி. என்.டி.சாலையில் அமைந்துள்ள ஸ்ரீராதாகிருஷ்ணன் பேரடைஸில் நடைபெறுகின்றது.

முன்னதாக மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று 7.6.2025 சனிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு நடைபெறுகின்றது.

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர், திரு.வி.க. சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தண்டலம் என்.கிருஷ்ணமூர்த்தி அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். மாவட்டக் கழகப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ், டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வி.பி.கலைராஜன்,இ.ஏ.பி.சிவாஜி, பி. ஜெ.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணவிழாவிற்கு மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் -அமைச்சர் சா.மு.நாசர் தலைமை வகிக்கிறார். மணமக்களை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர் பாபு, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., தமிழ்நாடு வணிகர் சங்ககங்களின் பேரவைத் தலைவர் ஏ.எம். விக்ரமராஜா, மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கோயம்பேடு அனைத்து ஒருங்கிணைந்த கூட்டமைப்பு சங்கத் தலைவர் ஜி.டி.ராஜசேகர், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சசிகாந்த் செந்தில் எம். பி., மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., வெற்றி அழகன் எம்.எல்.ஏ. காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ., பா.ரங்கநாதன், நந்தனம் நம்பிராஜன், டாக்டர் ந.சந்திரபாபு, ஈரோடு இறைவன், லேகா சந்திரசேகர், சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், கன்னிகை ஜி. ஸ்டாலின், வி.அன்புவாணன், ஏ.ஆர்.டி.உதயசூரியன், மீஞ்சூர் சுரேஷ், அழகிரிசதாசிவம், க.அமுதரசன், இரா.நரேந்திரன், ஒ.ஏ.நாகலிங்கம், டாக்டர் யாழினி, ஆர்.டி.இ. ஆதிசேஷன், கே.வி.லோகேஷ், கே.ஆறுமுகம், சன் முனியாண்டி, மு.பகலவன், கே.வி. ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், வி.ஜெ.சீனிவாசன், நடுக்குத்தகை ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, பி.வெங்கடா சலபதி, பா.செ.குணசேகரன், கே.சுப்பிரமணி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், கே.திராவிட பக்தன், டாக்டர் வி.சி.ஆர். குமரன், காயத்திரி ஸ்ரீதரன், எம்.ஜெயகுமார், சி.சு.ரவிச்சந்திரன், உதயமலர் பாண்டியன், தி.வை. ரவி, க.மு.தயாநிதி மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

## ஒன்றிய-நகர-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

அரியலூர், பெரம்பலூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.06.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | அரியலூர் | ஹோட்டல் லயா இன், அரியலூர். |
| 09.06.2025 திங்கள்கிழமை | காலை 9.00 மணி | பெரம்பலூர் | ஜி.கே.ரெசிடன்சி, வெங்கடேசபுரம், பெரம்பலூர். |
| | காலை 11.00 மணி | நீலகிரி | பிரீத்தி கிளாசிக் டவர்ஸ், குன்னூர் சாலை, உதகை. |

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–1–இல் சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | சோழிங்கநல்லூர் | கைலாஷ் கார்டன், பழைய மகாபலிபுரம் சாலை, சோழிங்கநல்லூர், சென்னை. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 05-06-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


நீதித்துறையின் மாண்பையும், சீரிய மரபையும் காத்து வந்தவர்!

# நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் மறைவு - சமூக நீதிக் கருத்தியல் தளத்தில் இயங்கும் அனைவருக்கும் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, ஜூன் 7-**

**ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், “நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களின் மறைவு, சமூக நீதிக் கருத்தியல் தளத்தில் இயங்கும் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் உளம் வருந்தினேன்.

நீதித்துறையின் மாண்பையும், சீரிய மரபையும் காத்துவந்தவர் என்பதுடன், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது அருந்ததியருக்கு 3 விழுக்காடு உள்ஒதுக்கீடு கொண்டுவருவதற்கான பரிந்துரையை அளித்த குழுவின் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவராக இருந்த போது, பிற்படுத்தப்பட்டோருக்கான தமிழ்நாடு அரசின் இடஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கான அறிக்கையினையும் தயாரித்து அளித்தவர் ஆவார்.

நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களின் மறைவு நீதித்துறைக்கு மட்டுமின்றி சமூக நீதிக் கருத்தியல் தளத்தில் இயங்கும் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நீதித்துறை சார்ந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

திருவள்ளூரில் பல குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றுக் கொடுத்த

# அரசு வழக்கறிஞர் கே.பி. புரட்சி தாசனுக்குப் பாராட்டு!

## ஆவடி மாநகர காவல் ஆணையர் பாராட்டுச் சான்று வழங்கி கௌரவித்தார்!

திருவள்ளூர், ஜூன் 07-

திருவள்ளூரில் பல குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றுக் கொடுத்த அரசு வழக்கறிஞர் கே.பி. புரட்சி தாசனுக்கு ஆவடி மாநகர காவல் ஆணையர் பாராட்டுச் சான்று வழங்கி கௌரவித்தார்.


திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி கரையான் சாவடியில் மீனாட்சி மற்றும் அவரது கணவர் சரவணன் ஆகியோர் வசித்து வந்தனர். இவர்களுக்கு ஜெய்காந்த் 6 வயது மகன் உள்ளார். கணவன் மனைவியும் கருத்து வேறுபட்டதால் 2018 அன்று டிசம்பரில் விரத்தி அடைந்த மீனாட்சி தன் பெற்ற பிள்ளையை கொலை செய்ய முடிவு எடுத்து ஜெய்காந்தன் முகத்தில் தலையாணி போட்டு அழுத்தி கொலை செய்து பின்னர் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொளுத்தி பக்கத்தில் இருந்த செப்டிங் டேங்கில் போட்டு மூடி விட்டார்.

இந்த வழக்கை பூந்தமல்லி போலீசார் வழக்குப்பதிவு செய்து பூந்தமல்லி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 7 ஆண்டுகளாக வழக்கு நடைபெற்று வந்தது.

2021 தி.மு.க. அரசு பதவி ஏற்ற பின் இந்த வழக்கு நடைபெறும் நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக கே.பி. புரட்சிதாசன் பதவி ஏற்ற பின் இந்த வழக்கில் தீவிரமாக அரசு தரப்பு சாட்சிகள், அரசு தரப்பு சான்று ஆவணங்கள் கொண்டும் தன் திறமையான வாதங்களை கொண்டு அரசு தரப்பில் வாதாடினார்.

விசாரணை முடிந்து கடந்த 28.3.2025ல் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இத்தீர்ப்பினை நீதிபதி விஜயகுமார், மீனாட்சி மீது அரசு தரப்பில் குற்றம் நிரூபிக்கப் பட்டதால் மீனாட்சிக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.1000 அபராதம் கட்ட தவறினால் மூன்று மாதம் சிறை தண்டனை என தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் புனிதமாக செயல்பட்ட அரசு தரப்பில் பலமான ஆதாரங்கள் இருந்ததால் தன் மகனை கொன்ற கொடூர தாய்க்கு தண்டனை பெற்று அப்பகுதியில் பெரும் பரபரப்பானது. எதிரிக்கு தண்டனை பெற்று தந்தமைக்காக ஆவடி மாநகர் காவல் ஆணையர் கே.சங்கர் நேற்று ஜூன் 06 அன்று அரசு வழக்கறிஞர் கே.பி. புரட்சிதாசனுக்கு பாராட்டு சான்று வழங்கி கௌரவித்தார்.



திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி கரையான்சாவடி பகுதியில் குற்ற வழக்கில் ஒரு பெண்ணுக்கு அரசு தரப்பில் நீதிமன்றத்தில் வாதாடி ஆயுள் தண்டனை பெற்று கொடுத்ததற்காக அரசு வழக்கறிஞர் கே.பி. புரட்சி தாசனுக்கு ஆவடி மாநகர காவல் ஆணையர் பாராட்டு சான்று வழங்கி கௌரவித்தார். உடன் காவல்துறை அதிகாரிகள் பலர் உள்ளனர்.

திருப்பூர் மாவட்டத்தில்

பாசனத்திற்காக,

# அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறக்க ஆணை!

சென்னை,ஜூன்.7-

திருப்பூர் மாவட்டம், அமராவதி ஆற்றில் உள்ள முதல் எட்டு பழைய இராஜ வாய்க்கால்களின் (இராமகுளம், கல்லாபுரம், குமரலிங்கம், சர்க்கார் கண்ணாடிபுத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர் மற்றும் காரத்தொழுவு) பாசன நிலங்களின், 2025-2026-ஆம் ஆண்டு முதல் போக பாசனத்திற்காக, அமராவதி அணையிலிருந்து, அமராவதி ஆற்று மதகு வழியாக 07.06.2025 முதல் 20.10.2025 வரை 135 நாட்களில், 80 நாட்கள் தண்ணீர் திறக்கப்படும். 55 நாட்கள் தண்ணீர் அடைப்பு என்ற அடிப்படையில், வினாடிக்கு 300 கன அடி வீதம் 2073.60 மில்லியன் கன அடிக்கு மிகாமல், தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், திருப்பூர் மாவட்டத்திலுள்ள 7520 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## காஞ்சி மணிமொழியார்

**ஜூன் 7 (1972)**



சென்னை மாநகரத்தில் கழகம் வளர்ந்திட தொய்வின்றிப் பணியாற்றியவர்.

1937–38ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்தவர்.

கழகத்தில் துணைப் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர்.

1962ஆம் ஆண்டு சென்னை தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருமதிப்புக்குப் பாத்திரமானவர்களில் முக்கியமானவர் இவர்.

“சின்ன உருவமும், சன்னமான குரலும், பொன்னான நெஞ்சும், மின்னும் விழிகளும் படைத்தவராய், துடிப்புமிகு நடையும், துவளாச் சுறுசுறுப்பும், தொண்டாற்றும் ஆர்வமும், தியாக மனப்பாங்கும் ஒருங்கே ஒருருவாய்த் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களாலேயே புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**